**கல்நேவ பிரதேச சபை**

**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆம் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 06 ஆம் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 02 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கல்நேவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது சபைக் காரியாலயத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 179,800 பெறுமதியான திரைச்சீலைகள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடமிருந்து சபைக்கு கிடைத்த ரூபா 16,695,000 பெறுமதியான பெக்கோ லோடர் இயந்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்ட ரூபா 65,150 பெறுமதியான முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,870,882 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 972,385 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வீதவரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134 இன் பிரகாரம் சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பகுதிகளைக் குறிப்பிட்டு அப்பிரதேசத்தில் அமைந்துள்ள நிலையான சொத்துக்கள் அல்லது நிலையான சொத்து வகையொன்றின் ஆண்டுப் பெறுமதியை இனங்கண்டு வீத வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 குத்தகை வரி

(அ) சபைக்குச் சொந்தமான வியாபார நிலையங்களை வருடாந்தம் குத்தகைக்கு விடுவதன் மூலம் மீளாய்வாண்டின் இறுதியில் 15 வியாபார நிலையங்களில் ரூபா 224,394 தொகையான கேள்வி பணம் அறவிடப்பட வேண்டியிருப்பதுடன், அவற்றின் நிலுவைக் காலம் 1-14 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு எடுத்திருந்த 16 குத்தகையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 149,700 தொகையான நிலுவை கடை வாடகை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் 522 வியாபார நிலையங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 110,575 ஆன வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம்

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்கு அறவிடப்பட வேண்டியதாக காணப்படும் நீதிமன்றத் தண்டப்பணத்தை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 135,384 தொகையான நிலுவையான நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பதிலாக எவ்வித அங்கீகாரமொன்று இல்லாமல் கணக்கிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1-6 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 79 அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ரூபா 9,621,878 தொகை கிடைக்க வேண்டி இருந்ததுடன் அறவிடுவதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1-6 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 132 அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ரூபா 10,967,132 தொகை செலுத்த வேண்டியதாக இருந்ததுடன், குறித்த பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) (அதிகாரம் 203) மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான ரூபா 1,663,890 பெறுமதியான ரிபே டிராக்டர் வண்டி பதிவு செய்யப்படாமல் நீண்ட காலமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமாக காணப்படும் கணணி, உபபாகம்

மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------------

சபைக்குச் சொந்தமான ரூபா 1,028,640 பெறுமதியான 24 உபகரணங்கள் மற்றும் கொங்கிரீட் கலவை இயந்திரம் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாததன் காரணமாக மீளாய்வாண்டிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) வருமான நிருவாகம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு